1972 டிசம்பர் 12]

திரு. தி. பொன்னுமலை : இந்த ஆண்டு எந்த எந்த மருத்துவ மனைகளை எடுத்துக்கொள்ள இருக்கிறார்கள்? அடுத்த ஆண்டு எந்த எந்த மருத்துவ மனைகள் எடுக்க உத்தேசம் உள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப் பட்டவை நாற்பது மருத்துவ மனைகள். அதற்குப் பின்னர் ஐந்து மருத்துவ மனைகளை எடுத்துக்கொள்ளப் போவதாகத் தெரிவித்திருக் கிறோம். அந்தப் பட்டியல் இப்போது என்னிடம் இல்லை. மாவட்டத்திற்கு இரண்டு மூன்று மருத்துவ மனைகள் வீதம் எல்லா மாவட்டங்களிலும் எடுக்கப்பட ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு எடுத்துக்கொள்வதுபற்றி இனிதான் முடிவு செய்யப் படும்.

திரு. சு. துரைசாமி : இவ்வாறிருக்கும் எல்லா மருத்துவ மனை களையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ள எவ்வளவு காலம் பிடிக்கும்? அரசாங்கம் முனைப்புத் திட்டம் மூலமாக விரைவாக எல்லாவற்றை யும் எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஓராண்டிலே கூட நிறை வேற்றிவிடலாம். ஆனால், அதற்காக ஐந்து கோடி ரூபாய் புதிய செலவினை அரசு ஏற்க வேண்டியிருக்கும்.

Vasectomy operations

* 122 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is a fall in the number of vasectomy operations in this State in recent times; and

(*b*) if so, whether the Government have undertaken any study in this regard?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : 1967–68 முதல் 1970–71-வது ஆண்டுவரை ஆண்களுக்கான குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை எண்ணிக்கையில் இறங்குமுகமாக இருந்தது. ஆனால் 1971–72-வது ஆண்டில் இது மிக அதிக அளவில் உயர்ந்துள்ளது.

திரு. என். கிட்டப்பா : அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் அரசு ஊழியர்களுக்கு வேலை உயர்வு அல்லது சிறப்பு ஊதிய உயர்வு அளிக்க அரசு ஆவன செய்ய முன்வருமா? எத்தனை அமைச்சர்கள்,

[1972 டிசம்பர் 12

எத்தனை சட்டப்பேரவை உறுப்பினர்கள் இதுவரை குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொண்டுள்ளனர் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஒருவரும் இந்நாள் சட்டமன்ற உறுப்பினர் ஒருவரும் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொண்டார்கள். தண்டராம்பட்டு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கடந்த ஆண்டு இந்த முனைப்புத் திட்டத்தில் அவரே தலைமை வகித்து—அவர் திரு. இராதாகிருட்டிணன் என்று கருதுகிறேன்—இந்த சிகிச்சை செய்து கொண்டார்கள். முன்னாள் உறுப்பினர் பேராவூருணி திரு. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் கடந்த ஆண்டு இந்த முகாமில் தலைமை வகித்துப் பல பேர்களுடன் சென்று, செய்துகொண்டார்கள். இளைஞராக உள்ள திரு. கிட்டப்பா போன்றவர்கள் விரைவில் முன்வருவார்கள் என்று அமைச்சர் எதிர்பார்த்து ஆவலோடு காத்திருக்கிறார். அமைச்சர்களில் நண்பர்கள் திரு. என். வி. நடராசன், திரு. ஆதித்தனார் போல பெரியவர்கள் சிலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு இது தேவை இல்லை. என்னைப்போன்றவர்கள் இது செய்துகொள்ள வேண்டிய நெருக்கடி காலகட்டத்தில் இருந்து விலகியிருக்கிறோம். ஆகவே, செய்துகொள்ளவேண்டிய வயதினர், இரண்டு மூன்று குழந்தைகளைப் பெற்றுக்கொண்டவர்கள் இருந்தால், அவர்களுக்கு இந்த நேரத்தில் திரு. கிட்டப்பா அவர்கள் கேள்வியின் மூலமாக அத்தனை பேருக்கும் வேண்டுகோள் விடுக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்களுடைய வாக்குகளைப் பெறுகிறவர்கள், அதிலும் அவர்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழவேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ந. தருமலிங்கம்: குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளுகிறவர்களுக்கு நபர் ஒன்றுக்கு மத்திய அரசு, மாநில அரசு ஆகியவை அளிக்கும் சலுகைத் தொகை எவ்வளவு? மத்திய அரசு அளிக்கும் சலுகைத் தொகை கூடுதலாக இருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: எப்பொழுது வேண்டுமானாலும் யாரும் இந்த அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள தமிழ்நாட்டிலுள்ள மாவட்டந்தோறுமுள்ள மருத்துவ மனைகளில் வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட மருத்துவமனைகளுக்குச் சென்று அங்கே மருத்துவம் பெற்றுக்கொண்டு வருவதா

1972 டிசம்பர் 12]

யிருந்தால், 30 ரூபாய் அளவுக்கு அவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. "இன்டென்சிவ் காம்ப்" என்ற முறையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது பத்தாயிரம் பேருக்கு இந்த அறுவைச் சிகிச்சை செய்வது என்று மாவட்ட ஆட்சியாளர் மூலமாகத் தீவிரமான முறையில் இது நடத்தப்படுகிறது. அந்த முனைப்பு இயக்கத்தில் ஒவ்வொருவருக்கும் ரூ. 100 செலவிடலாம் என்று அனுமதித்திருக்கிறது. அந்த நேரத்தில், 60 ரூபாய் அளவுக்கு அவர்களுக்கு இந்த உதவித் தொகை தரப்படுகிறது. ஆறு நாள் தங்கி, உணவு முதலியவைகளுக்கு ரூ. 20 எடுத்துக்கொள்ளப்படுகிறது. மருந்து, மற்ற செலவுகளுக்கு ரூ. 20 செலவழிக்கப்படுகிறது. எனவே, அந்தக் காலகட்டத்தில் மட்டும் ரூ. 60 அளவுக்கு அவர்கள் உதவித் தொகை பெற்றுக் கொண்டு ஆறு நாட்கள் தங்கியிருந்து நல்ல உடல் நலத்தோடு திரும்ப வழி செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று மக்கள் தொகைப் பெருக்கத்தைச் சுருக்குவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற அறுவைச் சிகிச்சை முறைதான் முழுமையும் கையாளப்படுகின்றது. பண்டைய மூதாதையோர் தன்னடக்கத்தோடு சில கட்டுப்பாடுகளுக்குட்பட்டு வாழ்ந்த காரணத்தினாலே அவர்கள் குறிப்பிட்ட காலத்திலே குழந்தைகள் பெற்றுக்கொண்டு பெற்ற குழந்தைகளும் நல்ல திடகாத்திரமாக வாழ்ந்தார்கள் என்பதையும் நாம் பார்க்கிறோம். அவற்றை ஆராய்ச்சி செய்து அப்படிப்பட்ட முறைகளைக் கல்வித் துறையின் மூலமாக மக்களிடம் பரப்ப அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மன அடக்கம், தன்னடக்கம் என்பனவற்றை உத்தமர் காந்தியடிகள் எடுத்துச்சொன்னார்கள். புலனடக்கம் பற்றி வள்ளலார் அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். வேறு பெரியவர்களும் இவற்றைப் பற்றியெல்லாம் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அந்தப் பெரியவர்கள் எடுத்துக் காட்டியவற்றை பெரும்பாலும் நடைமுறைக்குக் கொண்டுவர இயலாமை காரணமாகத்தான் நாம் இந்த அறுவை சிகிச்சை முறைகள் மூலமாக நாட்டு மக்களுக்கு பாதுகாப்புத் தேடுகிறோம்.

திரு. ஆ. பரந்தாமன்: அறுவைச் சிகிச்சையைப் பொறுத்த வரையில் இந்திய துணைக்கண்டத்திலேயே தமிழகத்திலேதான் ஜனத்தொகை அடிப்படையிலே பார்த்தால் முதன்மையாக இருந்து கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்களே அது உண்மையா ?

[1972 டிசம்பர் 12

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தமிழகம்தான் முதன்மை என்று சொல்லமுடியாத அளவுக்கு மகாராட்டிராவும், குஜராத் மாநிலமும் தீவிரத் திட்டம் என்ற வகையில் பல லட்சக்கணக்கானவர் களுக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிருர்கள். ஆனல் தமிழ்நாட்டில் அப்படி நாம் மேற்கொண்டு செய்கின்ற முறையிலே அந்த அளவு அடைய முடியவில்லே. கேரளாவிலே ஒரு முகாமிலே 75 ஆயிரம் 1 லட்சம் பேர்களுக்குச் செய்தார்கள். அப்படியும் இங்கே நாம் செய்யவில்லே. நாம் ஒவ்வொரு முகாமிலும் 500 பேர்கள் 600 பேர்கள் என்ற அளவுக்கு சிகிச்சை அளித்து, அவர்களே ஆறு நாட்கள் தங்கவைத்து உடல் நலம் காப்பாற்றப்படக்கூடிய ஏற்பாடுகளே "ஹெல்த் ரிசார்ட்" "நல்வாழ்வு நிலேயம்" என்ற முறையிலே நடைபெற்று வருகிறது. கடந்த ஆண்டுகூட மத்திய அரசு இதனைப் பாராட்டியிருக்கிருர்கள். தஞ்சை மாவட்ட ஆட்சித் தலேவராக இருந்த திரு. அந்தோணி அவர்களேப் பாராட்டியிருக் கிருர்கள். ஹெல்த் ரிசார்ட் முறையை எல்லா மாநிலங்களும் பின் பற்றவேண்டுமென்ற வகையிலே மத்திய அரசும் ஆலோசனே கூறி யிருக்கிறது.

திரு. தொ. க. சிறைமீட்டான் : ஒரு குழந்தை பெற்றவர்கள் அறுவைச் சிகிச்சை செய்யக்கூடாது என்ற தடை இருக்கிறதா? குழந்தைகளே தேவையில்லே என்று நினேக்கிறவர்கள் அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஒரு குழந்தை இருந்தும் உடல் நலத்தைப் பேணவேண்டுமென்ற முறையிலே சிகிச்சையளிக்க வேண்டுமென்ற வகையிலே அவர்கள் தனி உரிமைக்கு எழுதித் தந்தால் சிகிச்சை செய்து கொள்ளலாம். ஆனல் இந்த இயக்கத்திலே அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுவதில்லே.

திரு. கோ. செபமாலே : தலேவர் அவர்களே, தமிழகத்திலே தீவிர குடும்ப நலத் திட்டம் நடந்துகொண்டு வருகிறது. இதுவரை யில் எவ்வளவு பேர்கள் ஆசிரியர்களில் அறுவை சிகிச்சை செய்து கொண்டு இருக்கிருர்கள்? கிராம அதிகாரிகள், மற்றத் துறைகளிலே உள்ள உயர் அதிகாரிகள் இவர்களிலே எவ்வளவு பேர்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருக்கிருர்கள்? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடலூருக்கு வந்தபொழுது நானே செய்துகொண்டேன், நான் செய்துகொண்டேன் என்பதை என்னுடைய தொகுதியில் எல்லாம் விளம்பரம் செய்துகாட்டியிருக்கிறேன். என்னுடைய தொகுதியான மங்களூரில் அதிகமான பேர்கள் செய்திருக்கிருர்கள்.

1972 டிசம்பர் 12]

இப்படி நாமே ஏற்றுக்கொண்டு செய்வதால் மக்களுக்கு ஒரு பிடிப்பு இதிலே ஏற்படுகிறது. மேலும் இதை ஊக்குவிக்கின்ற முறையிலே இதிலே ஈடுபடுகின்ற ஆசிரியர்களுக்கு—அவர்கள் மக்களோடு ஒருவரோடொருவர் நெருங்கித் தொடர்பு கொள்கின்றவர்கள் என்ற வகையில்—அவர்கள் அதிகமான அளவிலே முன்வந்து செய்ய இந்த அரசாங்கம் அவர்களுக்கு நல்ல பல சலுகைகளைக்கொடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்கள் நான் முதலிலே பதிலளித்தபொழுது உறுப்பினர் திரு. செபமாலை அவர்களை விட்டுவிட்டதற்கு வருந்துகிறேன். அவர்களும் இந்தச் சிகிச்சையிலே ஈடுபட்டதற்காக நான் பாராட்டுகிறேன். ஆசிரியர்களும், கிராம அதிகாரிகளும் அவரவர்கள் வயதிற்கேற்ப இதனைச் செய்துகொள்ள வேண்டுமென்று ஏற்கனவே வேண்டுகோள் விடப் பட்டிருக்கிறது. ஆனால் அது அவரவர்களின் நிலையைப் பொறுத்தது. இருந்தாலும் அவர்கள் முன்வரவேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே மீண்டும் நினைவூட்டுகிறேன்.

திரு. ப. முத்துசாமி: தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள் எல்லாம் செய்துகொண்டால்தான் மக்களிடத்திலே இதைப்பற்றி இருக்கிற பயம் தெளியும். ஆகவே ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும் கலெக்டர் நிதியிலிருந்தோ அல்லது அரசாங்கத்திடமிருந்தோ அப்படிப்பட்ட ஊராட்சி ஒன்றியங் களுக்கும் மன்றங்களுக்கும் தனிச் சலுகைகள் தரப்படுமா? குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திலே ஈடுபட்டிருக்கின்ற அதிகாரிகள் பொது மக்களிடம் இதைப்பற்றி இருக்கக்கூடிய அச்சத்தைப் போக்கக்கூடிய முறையிலே அவர்களும் முன்மாதிரியாக இருக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிக அளவுக்கு 'number of vasectomy operations in proportion to eligible couples' என்பதாக தகுதியுள்ள தம்பதிகள் உள்ள எண்ணிக்கை விகிதாச்சாரத்தில் அதிக விகிதாச்சாரம் அதாவது அதிகமாக அறுவைச் சிகிச்சை செய்த இடங்களுக்கு பரிசு வழங்குகிற திட்டம் இருக்கிறது. அதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்கிறார்கள். ஒவ்வொரு ஒன்றியத்திலும் எந்தப் பஞ்சாயத்தில் அதிகமாகச் செய்தார்களோ அந்தப் பஞ்சாயத் துக்கும் பரிசு இருக்கிறது. டெவலப்மெண்ட் கவுன்சில் மூலமாக

இதிலே சிறந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு ஊக்குவிக்கின்ற முறை இருப்பதாகத் தெரிகிறது. அது செயல்படுகிறதா என்பது தெரிய வில்லை.

திரு. எ. க. துரைசாமி: ஒருவார இருவார விழாக்கள் என்ற முறையில் நடத்துகிறோம், சேலம் இரும்பாலைத் திட்டத்திற்காக அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக செய்ததைப்போல தமிழகம் முழு வதுமாக ஒரு நாளைக் குறிப்பிட்டு அந்த நாளில் அமைச்சர் எல்லோரும், மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் வந்திருந்து மக்களை ஈர்க்கின்ற முறையிலே ஏற்பாடு செய்து அங்கே நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்னால் இப்பொழுது செய்வதைவிட நல்ல பலன் விளையும் என்று அரசு கருதுகிறதா? அப்படியானால் ஒரு குறிப்பிட்ட நாளை குறித்து செயல்பட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒரே ஒரு நாளில் திருவிழா கொண்டாடிவிட்டு மிச்ச நாட்களில் உறங்குகின்ற பழக்கம் நம் நாட்டு பழக்கம் ஆகும். இப்பொழுது ஒரு வார இருவார விழா என்ற முறையிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறோம். அப்பொழுது கிட்டத்தட்ட 10 நாட்கள், 15 நாட்கள் நல்ல பிரச் சாரம் நடைபெற்று வருகிறது. இதைத்தவிர முனைப்பு இயக்கம் நடத்துகின்ற பொழுதும் 20–30 நாட்கள் இந்தத் திட்டத்தின் நல்ல கருத்துக்களை பிரச்சாரம் செய்கின்றோம். ஒவ்வொரு மாவட்டத் திலும் உள்ள ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் இவர்களை யெல்லாம் அழைத்துத்தான் முனைப்புத் திட்டம் என்ற முறையிலே விழா நடைபெறுகிறது. அப்படி நடைபெறுகின்ற பொழுது உறுப்பினர் அவர்களும் அதிலே பங்குகொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, அறுவைச் சிகிச்சையில்லாமலே சித்த மருத்துவ முறையிலே பல மருந்துகள் ஆராய்ச்சிகள் மூலமாக கண்டுபிடிக்கப்பட்டு அவை மூலமாக கர்ப்பத் தடை செய்யலாம் என்று சொல்கிறார்களே, அதைப்பற்றி அரசு முயற்சிசெய்து இருக்கிறார்களா? செய்யாவிட்டால் இனிமேலாவது செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, டெல்லியில் உள்ள குடும்பக் கட்டுப்பாட்டு மருந்துகள் ஆராய்ச்சித் துறையினர், ஆயுர்வேத மருந்துகள், சித்த மருந்துகள் இவற்றையெல்லாம்

1972 டிசம்பர் 12]

ஆராய்கின்ற பணியை மேற்கொண்டிருக்கிறார்கள். வேறு சில மாத்திரைகளையும் பயன்படுத்தமுடியுமா என்ற ஆராய்ச்சியையும் மேற்கொண்டிருக்கிறார்கள். சில மருத்துவமனைகளிலே அந்த மாத்திரைகள் பயன்படுத்தப்பட்டு புள்ளிவிவரங்கள் சொல்லப் படுகின்றன. அவற்றைப்பற்றித் திட்டவட்டமாக தெரிவிக்கின்ற வாய்ப்பு இல்லை. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் 100-க்கு 100 வெற்றி, 100-க்கு 95 வெற்றி, 100-க்கு 50 வெற்றி *Proportionate success of family planning as to the various methods* என்று அந்தந்த மருந்துக்கு ஏற்ப அமைந்துவிடுகின்றன. 100-க்கு 40 அல்லது 100-க்கு 50 என்ற அளவிலே பல அமைப்பையும் Conventional contraceptives விட Vasectomy, tubectomy முறைதான் அறுவை சிகிச்சை முறைதான்—செம்மையான முறையிலே பயன் அளிக்கும் என்ற கருத்து நிலவி வருகிறது.

திரு. வீ. மலைக்கண்ணன் : ஆஸ்திரேலியாக் கண்டத்தில் ஒரு பூ இருப்பதாகவும் அதைப் பெண்கள் புசித்தால் கருத்தரிப்பதில்லை என்று சொல்லப்படுகிறதே, அதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆஸ்திரேலியாக் கண்டத்திற்கு பூவிற்காகச் செல்லத் தேவையில்லை. தமிழ்நாட்டு வேப்ப எண்ணெக்கே அந்த வகைப் பயன் இருக்கிறது. அதைப் பயன் படுத்துகிறவர்களுடைய திறமையைப் பொறுத்தது.

ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

* 123 வினா.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டை தொகுதி, அம்மூர் பேரூராட்சியில், ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, அம்மூர் ஒரு பேரு ராட்சி; அதன் சுற்றுவட்டாரத்திலே நல்ல வைத்திய வசதிகள்